# கிராம நிர்வாக அலுவலர் தேர்வு - கிராம நிர்வாக நடைமுறைகள்

## நிபந்தனைக்குட்பட்ட நில ஒப்படைகள் மற்றும் நீண்ட கால நிலக் குத்தகைகள் (Cowles) பதிவேடு:

இப்பதிவேடு எட்டு பிரிவுகளாக பராமரிக்கப்பட வேண்டும்.

**பிரிவு 1 :**
அட்டவணையில் கண்ட இனத்தவருக்கு(Schedule Caste) வழங்கப்பட்ட சிறப்பு நிபந்தனைக்குட்பட்ட ஒப்படைகளைக் குறித்ததாகும்.

**பிரிவு 2 :**
இராணுவத்தினருக்கும், முன்னாள் இராணுவத்தினருக்கும் அளிக்கப்பட்ட நிபந்தனையுடன் கூடிய ஒப்படைகளைக் குறிப்பதாகும்.

**பிரிவு 3 :**
வருவாய் நிலை ஆணை எண் 15–22(3)ன் கீழ் கூறப்பட்டுள்ளவாறு நீர்ப்பாசனத் திட்டங்களால் பாதிக்கப்படும் நில ஒப்படைகளைப் பற்றியதாகும்.

**பிரிவு 4:**
சிறப்பு வீட்டுமனை விதிகளின் கீழ் உள்ள கொடைகளைக் குறிக்கும்.

**பிரிவு 5:**
வருவாய் நிலை ஆணை எண். 19 பத்தி 1– ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள நீண்டகால நிலக் குத்தகை மற்றும் இதர நிபந்தனைகளுக்குட்பட்ட கொடைகளுக்கு உரியதாகும்.

**பிரிவு 6 :**
அரசு ஆணை எண் 3102, வருவாய்த் துறை நாள் 23.12.1947ன்படி அரசியல் தியாகிகளுக்கு வழங்கப்பட்ட ஒப்படைக்குரியதாகும்.

**பிரிவு 7:**
வட்டப்பதிவேடு எண் 13 அவை ஒத்த முன்னேறிவரும் நீண்டகால நிலக்குத்தகை நிலங்களுக்குரியதாகும்.

**பிரிவு 8 :**
அட்டவணையில் கண்ட இனத்தினருக்கு நில எடுப்பு செய்து ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனைகளுக்கு உரியதாகும்.

அட்டவணையில் கண்ட இனத்தாருக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் (DC Lands) அல்லது வீட்டுமனைகளைப் பிற இனத்தாருக்கும் பராதீனம் செய்யப்பட்டிருப்பின் அதனைக் கண்டெடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-----

## சில முக்கிய வினா விடைகள்

- தமிழ்நாடு இனாம் ஒழிப்புச் சட்டம் எந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்டது ?
  1963
- எப்பொழுது A பதிவேடு வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டுடன் சரிபார்க்கப்படும் ?
  ஜமாபந்தியின் போது
- தமிழ்நாடு ஜமீன் ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி மாற்றச் சட்டம் கொண்டு வரப்பட்டது ?
  1948
- தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது ?
  1951
- நிபந்தனைக்குட்பட்ட நில ஒப்படைகள் மற்றும் நீண்ட கால நிலக் குத்தகைகள் பதிவேட்டில் எத்தனை பிரிவுகள் உள்ளன ?
  8
- இராணுவத்தினருக்கும் முன்னாள் இராணுவத்தினருக்கும் அளிக்கப்பட்ட ஒப்படைகள் எப்பகுதியில் உள்ளன ?
  பிரிவு – 2
- சிறப்பு வீட்டுமனை விதிகளின் கீழ் உள்ள கொடைகளைக் குறிக்கும் பகுதி எது ?
  பிரிவு – 4
- வருவாய் நிலை ஆணை எண் 19 பத்தி 1 இல் கொடுக்கப்பட்ட நீண்டகாலக் குத்தகை பற்றி எந்தப் பிரிவு கூறுகிறது ?
  பிரிவு – 5
- குறுகிய காலக் குத்தகை என்றால் என்ன ?
  5 அல்லது அதற்குக் குறைவான வருடக் குத்தகை
- எத்தனை வருடத்திற்கு மேற்பட்டது நீண்டகாலக் குத்தகை ?
  5 வருடங்களுக்கு மேல்
- கிராமக் கணக்கு எண் 1 எது பற்றிய கணக்கு ?
  கிராமத்தின் மாதவாரி சாகுபடி கணக்கு



Download more study materials visit www.tnpsctamil.in